©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, மே 11, 2011
சித்திரை 28, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (3D) எண் 6, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள் 15 செப்டம்பர் 2010.]*

***நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை, புதுடில்லி, 2 ஜூலை 2009.***

**எஸ்.ஓ. 1621(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்கு பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது:—

**1.** (1) இந்த ஆணை, 2009 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப்பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை, கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) (ஐந்தாவது திருத்தம்) ஆணை என்று பெயர் பெறும்.

(2) இது 9 ஜூலை 2009 அன்று செயலுக்கு வரும்.

**2.** 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில், விற்பனைக்காக கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல், வழங்கல் அல்லது விற்பனைக்காக இருப்பு வைத்தல் ஆகியவை தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், சர்க்கரைக்காக மேலும் ஆறு மாத கால அளவுக்கு அதாவது இந்த ஆணை செயல்படத் தொடங்கும் நாளிலிருந்து 8 ஜனவரி 2010 வரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

**3.** இந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட எதுவும், மாநிலத்திற்கு வெளியே உள்ள இடங்களுக்கு சர்க்கரையை எடுத்துச் செல்வதை, விநியோகிப்பதை அல்லது விற்பனை செய்வதை பாதிக்காது அல்லது இப்பொருளை இறக்குமதி செய்வதற்குப் பொருந்தாது.

ஆனால், மத்திய அரசு அல்லது மாநில அரசுகள், இறக்குமதியாளர்கள் பெற்ற சர்க்கரை இருப்பு மற்றும் வைத்திருந்த இருப்புகளை அறிவிக்குமாறு அவர்களுக்கு உத்தரவிடலாம்.

2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையின் ஏனைய அனைத்து விதித்துறைகளும், மேலே 2 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு தொடர்ந்து செயலில் இருக்கும்.

**ராகேஷ் கக்கர்,**
*மத்திய அரசு கூடுதல் செயலாளர்.*

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**ஸ்வரன்சிங்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**முனைவர் ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

***நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை),***
***ஆணை, புதுடில்லி, 18 டிசம்பர் 2009.***

**எஸ்.ஒ. 3249(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்கு பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது.

**1.** (1) இந்த ஆணை, 2009 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப்பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை, கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) (ஐந்தாவது திருத்தம்) ஆணை என்று பெயர் பெறும்.

(2) இது 9 ஜனவரி 2010 அன்று செயலுக்கு வரும்.

**2.** 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில், விற்பனைக்காக கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல், வழங்கல் அல்லது விற்பனைக்காக இருப்பு வைத்தல் ஆகியவை தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், சர்க்கரைக்காக மேலும் ஆறு மாத கால அளவுக்கு அதாவது இந்த ஆணை 30 செப்டம்பர் 2010 வரை அல்லது மேற்கொண்டும் ஆணைகள் பிறப்பிக்கப்படும்வரை இவற்றில் எது முந்தையதோ அந்நாள் வரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

**3.** இந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட எதுவும் மாநிலத்திற்கு வெளியே உள்ள இடங்களுக்கு சர்க்கரையை எடுத்துச் செல்வதை, விநியோகிப்பதை அல்லது விற்பனை செய்வதை பாதிக்காது அல்லது இப்பொருளை இறக்குமதி செய்வதற்கு இது பொருந்தாது.

ஆனால், மத்திய அரசு அல்லது மாநில அரசுகள், இறக்குமதியாளர்கள் பெற்ற சர்க்கரை இருப்பு மற்றும் வைத்திருந்த இருப்புகளை அறிவிக்குமாறு அவர்களுக்கு உத்தரவிடலாம்.

2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையின் ஏனைய அனைத்து விதித்துறைகளும், மேலே 2 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு தொடர்ந்து செயலில் இருக்கும்.

**ராகேஷ் கக்கர்,**
*மத்திய அரசு கூடுதல் செயலாளர்.*

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**ஸ்வரன்சிங்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**முனைவர் ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (3டி) எண் 11, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள்: 15 அக்டோபர் 2010.]*

***நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் திட்ட அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை, புதுடில்லி, 29 செப்டம்பர் 2010.***

**எஸ்.ஒ. 2361(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறைகள், கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாடு ஆகியவற்றை நீக்குதல்) ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்குப் பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது. அதாவது:—

1. (1) இந்த ஆணை, 2010 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப்பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறைகள், கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாடு ஆகியவற்றை நீக்குதல்) திருத்த ஆணை எனப்படும்.

(2) இந்த ஆணை 01 அக்டோபர் 2010 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை, கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாடு) ஆகியவற்றை நீக்குதல் ஆணையின் (இனிமேல் மேற்சொன்ன ஆணை என்று குறிப்பிடப்படும்) இந்த விதித்துறைகள் (5 மற்றும் 6 ஆம் பகுதிகள் நீங்கலாக)

பின்வரும் பொருட்களைப் பொறுத்தவரையில், அவற்றை கொள்முதல் செய்தல், கொண்டு செல்லுதல், விற்பனை, வழங்கல், விநியோகித்தல் அல்லது இருப்பு வைத்தல் ஆகியவற்றுக்குப் பொருந்தாது.

(i) மேற்கொண்டும் 30 செப்டம்பர் 2011 வரையில் பயறு வகைகள், நெல் மற்றும் அரிசி.

(ii) மேற்கொண்டும் 31 மார்ச் 2011 வரையில் சமையல் எண்ணெய்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள்.

(iii) மேற்கொண்டும் 31 டிசம்பர் 2010 வரையில் சர்க்கரை ஆகியன.

3. இந்த ஆணையில் திருத்தப்பட்டவாறு, மேற்சொன்ன ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள எதுவும், மாநிலங்களுக்கு வெளியே உள்ள இடங்களுக்கு இப்பொருட்களை எடுத்து செல்வதை, விநியோகிப்பதை, அல்லது விற்பனை செய்வதை பாதிக்காது அல்லது இப்பொருட்களை இறக்குமதி செய்தற்குப் பெருந்தாது.

ஆனால், மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் இறக்குமதியாளர்கள் பெற்ற இப்பொருட்களின் இருப்பு மற்றும் வைத்திருந்த இருப்புக்கள் பற்றி அறிவிக்குமாறு அவர்களுக்கு உத்தரவிடலாம்.

**விளக்கம்:** மொத்த விற்பனையாளர் அல்லது சில்லரை விற்பனையாளர் அல்லது வணிகர், பயறுவகைகள், நெல், அரிசி, சமையல் எண்ணெய்கள், சமையல் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை பொறுத்தமட்டில், அவர் வைத்துள்ள இருப்புகளின் ஒரு பகுதியானது இறக்குமதி செய்யப்பட்டதிலிருந்து பெறப்பட்டது என்பதை அவர் நிருபித்தல், இருப்பு வரையறை அளவைக் கணக்கிடும் நோக்கத்திற்காக அவை கணக்கிலிருந்து நீக்கப்படும்.

4. மேற்சொன்ன ஆணையின் ஏனைய அனைத்து விதித்துறைகளும், இந்த ஆணையின் 2 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு தொடர்ந்து செயலில் இருக்கும்.

**ராகேஷ் கக்கர்,**
*மத்திய அரசு கூடுதல் செயலாளர்.*

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**ஸ்வரன்சிங்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**முனைவர் ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.